Registered as a News Paper in Ceylon P. M. G. No. H. A. 9/3??? of 1953.

விரோதிஸு (1889) ஆலை மீ 28உ ஆரம்பமானது

# இந்துசாதனம்

சிவமயம்

வெள்ளிதோறும் வெளிவருவது

தனிப்பிரதி விலை: சதம் 10.

[புத்-எசு] யாழ்ப்பாணம்:- குரோதிஸு கார்த்திகைமீ உசுஉ வெள்ளிக்கிழமை (11 December 1964) [இல-நசு]

# சைவநீதியைத் தெய்வ நீதியாக்குவது சரியா?

## இன்று நாவலர் இருந்திருந்தால்..........?

[ திரு. அ. சபாபதிப்பிள்ளை, ஹற்றன் ]

"வான்முகில் வழாது பெய்க
மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க
குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க
நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி
விளங்குக உலக மெல்லாம்".

"சைவநீதி" விளங்குக உலகமெல்லாம் என்று பாடினுர் கந்தபுராண ஆசிரியர் கச்சியப்பர். சைவம் விளங்குக உலகமெல்லாம் என்று கூறியிருந்தால் குறுகிய நோக்கம் எனலாம்.

சைவ நீதி, அன்பு-நெறி, அன்பே சிவம். சிவம் என்முல் 'பெருஞ் சுகம்' என்று கிறீஸ்தவ நூலாகிய தேம்பாவணியிலும் கூறப்படுகின்றது. மேலும் 'மங்களம்' 'நன்மை எனவும் பொருள் உண்டு.

"யாதொரு தெய்வங்கொண்டீர்
அத்தெய்வமாகி யாங்கே
மாதொரு பாகனுர்தாம் வருவர்"

என்ற சித்தியார்கூற்று எவ்வளவு அழகாகச் சமரசக் கருத்தை வெளியிடுகின்றது. "மோட்சமடைய ஏற்ற மதம் எங்கள்மதமே" யானை கண்ட குருடர்போல் கூக்குரல் இடவில்லை சைவ நீதி. சைவநீதியின் பெயரால் இதுவரை ஒரு சொட்டு இரத்தம்கூடச் சிந்தப்படவில்லை. மதமாற்றம் தானும் செய்ததுண்டா?

இப்பெருமைவாய்ந்த சைவ நீதியை குறுகிய நோக்கமென்று "தெய்வ நீதி" யாக மாற்றலாமா?

அண்மையில் (1-12-64) நாவலப்பிட்டி இந்து வாலிப சங்க ஆதரவில் நடந்த பகிரங்கக் கூட்டமொன்றில் தலைமை தாங்கிய திரு எஸ். இலட்சுமணன் அவர்கள் திவ்விய ஜீவன சங்கத்தினர் "சைவ நீதியை" "தெய்வ நீதி" என்று திருத்துவது முறையா என்று யோகிராஜ் சச்சிதானந்த சுவாமிகளைக் கேட்டு விளக்கம் கோரினுர்கள்.

சுவாமி அவர்கள் "சைவ நீதி" குறுகிய நோக்கம்; எனவே பல மதத்தினர் கூடி இருக்கும் தங்கள் கூட்டங்களில் எல்லோரும் பாடக்கூடியமுறையில் திருத்திப்பாடுவதாகக் கூறினுர். ஒரு பெரியாருடைய பாட்டை திருத்துவது பிழைதான். ஆனல் இக்கால நிலையில் தாங்கள் இவ்வாறு திருத்திப் படிப்பது கச்சியப்பருக்கே பெரும் சேவை செய்வதாகச் சொன்னுர்கள். மேலும் ஒரு "லேபலை" மாற்றினுல் அப்பொருளின் தரம்குறையுமா என்றும் கேட்டார்கள். கச்சியப்பர் இன்று இருந்தால் தெய்வநீதி என்றே பாடியிருப்பார் அல்லது திருத்திப் பாடியதறகுப் போற்றியிருப்பார் என்றும் கூறினுர்கள்.

உளம் கனிந்து உள்ளம் உணர்ந்து ஒரு பெரும் புலவர் இயற்றிய பாடலில் மாற்றம் காண விழைவார் தமது குறுகிய நோக்கினை வலிந்து புகுத்தும் புரளிக்காறராவர் "சைவநீதி" என்பது ஒரு சமயத்திற்கு மட்டும் உரியதெனப் பொருள் கொள்ளுவதே குறுகிய மனப்பான்மையாகும். தாம் உயர்வெனக் கருதுவது உலகோர் எல்லோருக்கும் உரியதெனக் கருதுவது பெருந்தன்மை, உலகப் பொதுமை. "யான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்".

இப்பாடலில் குறுகியமனப்பான்மை உளதென்று நம்புபவர்கள், இதுபோன்ற அல்லது இதனினும் சிறந்தபாடல் இயற்ற வேண்டுமே ஒழிய, இதனைத் திருத்த முனைவது அழகினை, அல்லது அறிவினை நமக் கேற்றதல்ல என்பதற்காகச் சிதைப்பதாகும் சிதைப்பது சிறப்பாகுமா?

"லேபலை" மாற்றினுல் பொருள் தரம் குறையுமா என்றுர்களே! "சைவநீதி" என்ன அவ்வளவு மட்டானதா? சைவ நீதியே சைவ சித்தாந்தம் கிறீஸ்தவ சமயத்தைப் பரப்பும் ஒரே நோக்குடன் வந்த டாக்டர் ஜி யு போப் அவர்கள் சைவ சித்தாந்தத்தைப்பற்றிக் கூறுவதைப் பாருங்கள்.

"இந்தியாவில் ... மதங்கள் எல்லாவற்றிலும் ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவசித்தாந்த ஞான மேம்பிக மேலான து. இது சிறப்பாக தென்னிந்தியாவுக்கு அல்லது தமிழருக்குச் சொந்தமானது தென்னிந்திய மக்களின் பெருமையை அறிய விரும்பும் ஒவ்வொருவரும் அவர் ஞானத்தைப் பயில வேண்டும். சைவ சமயம் ஆரியருக்கு முற்பட்ட தமிழர்களது சமயம் இது ஒவ்வொரு தமிழன் உள்ளத்திலும் பதிந்திருக்கின்றது கடவுள், உயிர், வினை, உலகம் முதலியவற்றின தத்துவத்தை விளக்கும் இந்நூல்கள் இதுவரையும் ஆங்கில மொழியில் வெளிவரவில்லை அந்நூல்கள் தமிழ் மொழியில் மாத்திரம இருக்கின்றன"

—(திருவாசகம் டாக்டர் போப்)

இனி, பாரதியாரும் "சுற்றைச சடை வேண்டா, காவியுடை வேண்டா பாவித்தால் போதும் பரமநிலை எய்திட" என்கிருர்.

ஆனல் வரட்டு வேதாந்தக் கொள்கையினர் "காயமே இது பொய்யடா காற்றடைத்த பையடா" என்ற சோம்பல் வாதத்தைப் பரப்புகிருர்கள் இச்சோம்பல் வாதச் செருகலினுல் சைவமக்கள் வாடி வதங்கி வலுவிழந்து பேசா மடைந்தைகளாக இன்று இருக்கிருர்கள்.

அன்று நாவலர்பெருமான் ... களில் ... தற்கு

என்ன செய்தார்? திரு அருட்பா என்று பெயர் வைத்ததற்கே மஞ்சக் குப்பம் கோட்டில் வழக்குத் தொடர்ந்து வெற்றியும் கண்டார். திருமுறைகளைத் திருத்துவதையும், திருமுறைகளை ஒதுக்கி கூட்டுப் பிரார்த்தனைகளில் சில்லறைச் சிறு துணுக்குகளைப் பாடுவதையும் பார்த்து பேசாமலிருப்பதா?

திருமுறை நிந்தனை ஒழிக! வாழ்க திருமுறை!! வாழ்க சைவம்!!! "மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலக மெல்லாம்."

---

### நற்சிந்தனை

அண்டசராசர மவன்வடிவாகும்
அண்ட சராசர மவனே யாகும்
அண்ட சராசரத் ததிசயந்
தன்னை
அண்டரு மறியா ததிசயித்
தாரே.

---

### திருக்கேதீச்சரத் திருவாசக விழா

ஈழத்துச் சிவனடியார் திருக்கூட்ட ஆதரவில் 11-12-64 தொடக்கம் 20-12-64 வரை திருவெம்பாவை நாட்களில் திருக்கேதீச்சரம் திருவாசக மடத்தில் சாதனையும் போதனையும் நடைபெறும்.

திருவெம்பாவை பாராயணம், ஆலயவழிபாடு, வேத பாராயணம், தியானம், புராணபடனம், திருவாசக பாராயணம், விரிவுரைகள் ஷெ விழாவில் இடம்பெறும் மாகேசுர பூசைக்குரிய ஒழுங்குகளும் செய்யப்பட்டிருக்கின்றன. 20-12-64 ஞாயிறு அதிகாலை ஆதிரைத்தரிசனமும் காலை 9 மணியளவில் புராண படனப் பூர்த்தியும் மாகேசுர பூசையும் நிகழும்.

---

# மங்கையர் நோற்கும் மார்கழி நோன்பு

## உலகம் வாழ நோற்கும் உயர்ந்த பண்பு

[ நீராவியடி: திரு. வை. இரகுநாதமுதலியார் M. Sc ]

"மார்கழித் திங்கள் மதி நிறைந்த நன் நாளால் நீராடப் போதுவீர், நேரிழையீர்" என்ற ஆண்டாளின் அருள் பொதிந்த பாடல் மார்கழித் திங்களின் பெருமையை நன்குவிளக்குகின்றது. இதன் பெருமையைச் செப்ப இதைவிட வேறு நல்ல சொற்கள் இல்லை எனலாம். உறங்கிக் கிடந்த உலகம் விழிப்புறும நேரம், பனிக்குளிருக்குப் பயந்து படுக்கையைவிட்டுஎழாத காலம். 'வைகறைத்துயிலெழு' என்ற ஔவையின் பொன் மொழியைப்பொய்ப்பிக்கின்ற அந்த நேரத்தில், ஆலயங்களிலே வெள்ளை விரிசங்கின் பேரரவமும், மணிகளின் இன்னிசை நாதமும், ஆண்டவனைத் தரிசிக்க வரும் அடியார்களின் பண் கனிந்த இன்னிசைப் பாக்களும் ஒலிப்பது மார்கழி மாதத்துத் திருவாதிரைப் புண்ணிய தினத்திற்கு முந்திய பத்து நாட்களிலும் தான். மாணிக்கமழை பொழிந்த மணிவாசக சுவாமிகளும், கண்ணனைத் தன் கணவனுகவே கொண்டு வாழ்ந்த ஆண்டாளும் இப் புண்ணிய தினத்தில் மகளிர் வைகறைத துயில் எழுந்து, கொட்டும் பனியையும பொருட்படுத்தாது தோழியருடன் பூப்போன்ற அழகிய பொய்கைகளிலே புனலாடுவதைக் கண்டு, அவர்கள் பாவனையாகவும் கூற்ருகவும் "திருவெம்பாவை, "திருப்பாவை" என்னும் பதிகங்களைப் பாடினுர்கள்.

மார்கழித் திங்களின் காலை எழில வணக்கத்திற்குரியது இக்காலம் தேவர்களின் விடியற்காலம் எனப்படும் பூவுலகத்தோர்க்கு ஒரு வருடம் தேவலோகத்தோர்க்கு ஒரு நாள் எனப்படும். அருணன் இந்திரன் திசை அணுகிய இவ் விடியற்காலம் தேவலோகத்தோர்க்கும் விடியற்கால மேயாகும். காலை எழிலின் தோற்றம் எழுத்தில், எண்ணத்தில், அடங்காதவை. தொடுவானத்துக் கப்பால் தோன்றிய பகலவனைக்கண்டு கீழ்வானம் தன் சிவந்த அதரங்களைக் காட்டிச் சிறுநகை பூத்தது நளிர் கங்குலாகிய நங்கையும் ஆதவன் வரவு கண்டு நாணினுளென ஏகினுள். பகலவனைக் கண்ட பனிமடந்தையும் பின் தொடர்ந்தாள். பகலவன் வரவு கண்டு பங்கையங்கள் இதழ் பிரித்து வரவேற்றன. அல்லி மலர் இதழ்குவித்து நாணி நின்றன. மற்றும் மலர்ந்த மென் மலர்கள் இதழ் விரித்து நறுமணம் வீச, அவை ஆங்கு மெல்லென வீசிய பனிக்காற்றிற் தவழ்ந்து இயறகைக்குச் சோலை அளித்தும், பூவுலகத்தோர்க்கு இன்பத்தையும் ஊட்டின.

இந்த அற்புதமான எழில் மிக்க இனிய நேரத்திலே, வண்ணப் பட்சிகளும் பறவைகளும், இன்னிசை சொட்டச் சொட்ட இசைக் குரல் எழுப்பி உதிக்கும் இள ஞாயிற்றிற்கு நல்வரவு கூறி மகிழ்வித்தன. பூங்குயில்களும், கோழிகளும் கீதமிசைத்தன, குருகுகளும்சங்குகளும் இயம்பின. புட்கள் சிலம்பின, வெள்ளை விரிசங்கின் பேரரவம் ஆலயங்களிலே ஒலித்துப் புதுணர்ச்சி அளித்தன. இவ்வாறு இயற்கை குதூகலித்தது. ஆண்டவனின் உறைவிடங்கள் பற்பல இன்னிசைகளைப் பரப்பின ஆலயங்களின் மணிகள் முழங்கி உறங்கி எழுந்த உலகிற்கோர் புத்துணர்ச்சி ஊட்டின, இறைவன் சந்நிதியில் ஒலித்த காலை இன்னிசையும் வெண்கல நாதத்தோடு குழைந்து இனிது ஒலித்தது. ஆதவ

தொடர்ச்சி 3ம் பக்கம்

THE HINDU ORGAN

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம்
வீழ்கதண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லா மரனுமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

குரோதி ஹு கார்த்திகை மீ
உகூ உ வெள்ளிக்கிழமை

## திருவெம்பாவை

திருவாதவூரடிகள் திருமுதுகுன்றத்தையும் திருவெண்ணெய் நல்லூர்த்திருவருட் டுறையையும் தரிசித்துக்கொண்டு திருவண்ணமலையைச் சார்ந்தார்.

அன்றிருவர் தேடவழ லான
தோரு வெற்பாய்
நின்றவடி வோமன நிறைந்த
பெருவாழ்வோ
என்றமலை யண்ணலை இறைஞ்
சியருள் கோண்டே
சென்றருணை யாகிய செழும்பதி
புகுந்தார்.

திருக்கோயிலிலே சிவபெருமான் அவருக்குக் குருந்தமர நீழலில் ஆட்கொண்டருளிய திருக்கோலத்தைக் காட்ட அவர் தொழுது பரவசமானார். அத் திருத்தலத்தே சிலகாலம் வாசஞ் செய்கின்ற காலத்து மார்கழி மாசம் வந்தது. திருவாதிரைக்கு முன்பு பத்துத் தினத்தும் விடியற்காலத்தே வீடுகள் தோறும் பெண்கள் ஒருவரை ஒருவர் அழைத்துக் கூடிச்சென்று நீராடி வருவதைக் கண்டார். அவர்கள் தங்களுக்குள்ளே உரையாடுவதாக அவ்வப் பருவத்துக்கேற்பச் சிருஷ்டிக்கிரமத்திலே சத்தியின் தொழில்களை விளக்குவதாயும் சத்தியை வியந்ததாயும் உள்ளுறையோடு கூடிய திருவெம்பாவை யென்னும் இருபது செய்யுட்களைக் கொண்டதிருப்பதிகத்தைப் பாடியருளினார். இது ஒவ்வொரு செய்யுளும் 'எம்பாவாய்' என்ற சொற்ருெடருடன் பூர்த்தியாகின்றபடியால் இப் பதிகத்துக்கு திருவெம்பாவை யென்ற காரணப் பெயர் உண்டானது. 'மார்கழித் திருவாதிரைக்கு முதலொன்பது நாளும் ஆன்மார்த்தம் பரார்த்தம் என்னும் இரண்டினும் இத் திருவெம்பாவையே ஓதல் வேண்டும். திருவாதிரையிலே திருவெம்பாவை ஓதிப் பின்பு வழக்கப்படியே தேவார முதலியனவும் ஓதல் வேண்டும்' என ஆறுமுகநாவலர் தமது இரண்டாஞ் சைவ வினவிடையில் கூறியிருக்கின்ருர்.

மணிவாசகப் பெருமான் மனப்புலத்தைத் திருத்தி பசுபோதங்களைக் களைந்து அருள் நீர் பாய்ச்சப்பெற்று அறிவுருவாய் விளைந்த பரமானந்தவமுதத்தை அருந்தின மதுகையாலே ஞானமயமான அருட்டிருவாசகத்தை உலகுய்யப் பாடியருளினார் திருவாசகம், திருக்கோவையார் முழுவதும் மந்திரவடிவமானவை. ஆகையினுற்ருன் அவற்றை மணிவாசகப்பெருமான் கூற அழகிய திருச்சிற்றம்பலமுடையார் தமது திருக்கரத்தினுலெழுதி ஏட்டினைக் காப்புச் செய்து கனகசபையிலுள்ள பஞ்சாக்கரப் படியில் வைத்தனர்.

திருவெம்பாவை சிவபெருமானுடைய இலக்கணங்களையும், அவர் ஆன்மாக்களுடைய பாசத்தை நீக்கி, திருவடிப்பேற்றை அளிக்கும் தன்மைகளையும் விளக்குகின்றது. 'வீணை நேரத்தைக் கழித்துவிடாதே, ஞானப்பொருளான தலைவனை, நமது கண்களுக்கு இனிய காட்சி தருவானைப் பாடுவோம். வருவாயாக' என ஒரு பெண் மற்றையவர்களை அழைப்பது நிலையில்லாத இன்பத்தை நாடி அலையாமல் நிலையுள்ள பேரின்பத்தை நாடவேண்டுமென்னும் பாடத்தை மக்களுக்குக் கற்பிக்கின்றது. இறைவன் பண்டைப்பொருள்களுக்கும் பழமையானவன்; புதுமைக்கும் புதுமையானவன் அவனுடைய திருமேனி அம்மையப்பன் வடிவானது. அவனுடைய திருமுடி எல்லாப் பொருளையுங் கடந்தது. அவனுடைய திருவடி கீழேழு உலகங்களையும் கடந்தது; அவனுடைய புகழை ஞானநூல்கள் வாயிலாக எவ்வளவுக்கு உயிர்கள் ஓதித்தாலும் அத்துதி முற்றுப் பெருது.

எப்பொருட்கும் முதலாயுள்ள திருவடிகளுக்கு வணக்கம், எப்பொருட்கும் முடிவாகவுள்ள திருவடிகளுக்கு வணக்கம். எல்லா உயிர்களும் தோன்றுவதற்குக் காரணமான, திருவடிகளுக்கு வணக்கம். எல்லா உயிர்களுக்கும் பாதுகாப்பாகவுள்ள திருவடிகளுக்கு வணக்கம்; திருமாலும், பிரமனும் காணமுடியாத திருவடிகளுக்கு வணக்கம்; எங்களை அடிமையாக்கி உய்யும்படி செய்கின்ற திருவடிகளுக்கு வணக்கம். என்ற விண்ணப்பத்துடன் பதிகம் பூர்த்தியாகின்றது.

சைவ மக்கள் விடியற்காலத்துக்குமுன் நீராடி ஆசாரசீலராய் ஆலயங்களிலும் மடாலயங்களிலும் திருவெம்பாவையை யோதி இம்மைப்பயனையும், மறுமைப்பயனையும் அடைவார்களாக திருவாதிரை நக்ஷத்திரத்திலே சபாநாயகரைக் குறித்து உபவாசமாக விரதமனுட்டித்தல் உத்தமம். இவ்விரதத்தைச் சிதம்பரத்திலிருந்து அநுட்டிப்பது உத்தமோத்தமம்.

திருவெம்பாவைக் காலத்தில் மணிவாசகப்பெருமானுடைய திருச்சரிதத்தைக் கூறுகின்ற திருவாதவூரடிகள் புராணத்தை ஆலயங்களிலும், மடாலயங்களிலும் வழமைபோலப் புராணபடனம் செய்ய வேண்டும் நாட்டில் வறுமை, பிணி, கொலை, களவு முதலிய தீமைகள் நீங்குவதற்குத் திருவெம்பாவை ஓதலும், திருவாதவூரடிகள் புராணபடனமும் சிறந்த சாதனங்களாகும்.

—:—

# திருவள்ளுவர் — நாவலர் உருவ முத்திரைகள் வெளியிடுக

—o—

## வடமாநில சைவ இளைஞர் மாமன்றம் அரசாங்கத்திடம் கோரிக்கை

"சைவ சமயம் வளர்ச்சி பெற சைவ இளைஞர்கள் யாவரும் சமயக் கல்வியில் அக்கறை காட்டி வருதல் வேண்டும். சமயநெறிமுறைகளைத் தவருதுகைக்கொண்டு ஒழுகி வர வேண்டியதும் மிகப் பிரதானமாகும்.

உலக மக்களால் போற்றப்பட்டுப் பலமொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டு வருவதாகிய திருக்குறளை இயற்றிய திருவள்ளுவர் நினைவு தினமாகிய மாசி உத்திரத்தில் அவரது உருவமுத்திரை வெளியிடும்படி அரசாங்கத்தைக் கேட்கவேண்டும்".

இவ்வாறு வண்ணை நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையில் நடைபெற்ற வடமாநில சைவ இளைஞர் மாமன்ற நிருவாகசபைக் கூட்டத்திற்குத் தலைமைவகித்துப் பேசிய மன்றத்தலைவர் திரு. வை. இரகுநாத முதலியார் குறிப்பிட்டார்.

பின்வரும் தீர்மானங்கள் நிறைவேறறப்பெற்றன:

1. சைவ சமயத்திற்கென இருந்துவந்த திருநெல்வேலிச் சைவாசிரிய கலாசாலையை மீண்டும் திறந்து நடத்த வேண்டும்; பிற கலாசாலைகளில் சைவ கலாச்சாரங்கள் புறக்கணிக்கப்பட்டும், புறப்பாக வழிபாட்டு ஸ்தலங்கள் ஒதுக்கப்படாமலும் இருந்து வருவதினுல் எதிர்காலத்தில நமது சமய வளர்ச்சி அடக்கி ஒடுக்கப்பட்டு வருமென அஞ்சுகிருேம்.

2. திருவள்ளுவர், நாவலர் நினைவுதின முத்திரைகள் வெளியிடுமாறு அரசினரைக் கேட்டுக்கொள்ளுதல்.

கோணேஸ்வரத்தைப் புனிதத் தலமாக்குதல் ஆகிய இவைகளைச் செய்ய வேண்டுமென அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானங்கள் நிறைவேறறப்பட்டன.

திருக்கேதீஸ்வரத்தில் 18-12-64 — 27-12-64 வரை நடைபெறும் சிரமதான இயக்கத்தில் மன்றமும் கலந்துகொள்ள வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது.

—

### நாயன்மார்கட்டில் திருவெம்பாவை சிறப்பாக நடைபெறுகிறது

—o—

நாயன்மார்கட்டு, சைவ சமய அபிவிருத்திக் கழகத்தினரால் பேச்சியம்மன் என வழங்கும் ஸ்ரீ. இராச இராசேஸ்வரி அம்பாள் தேவஸ்தானத்தில் திருவெம்பாவை முன்னிட்டு, பத்துநாட்களும் புராணபடனமும், விசேட பூசையும் நடைபெறும்.

ஷெ கழகத்தினரால் காலையில் வீதிவழியாகத் திருவெம்பாவை ஓதப்பெறும். திருவாதிரைத்திருநாளன்று மணிவாசகர் திருவுருவப்பட ஊர்வலமும் இடம்பெறும்,

# சுவைத்துப் பாருங்கள்

## பாசமும் நேசமும்

இறுதி யாத்திரை!

இரவு வேந்தனின் இறுதி யாத்திரை!!

கிழக்கு நங்கையின் குங்குமம் மலங்க, கீழுலக (பூமி) நங்கை கண்ணீர் விட்டுக் கலங்க, பறவைகள் ஒப்பாரி வைக்கச் சங்குகள் முழங்க, மேற்றிசை நோக்கிச் சென்று கொண்டிருந்தது.

ஒரு வீடு!

அழகான வீடு!!

உள்ளே ஓர் அறை.

அரண்மனைத் திரைச்சேரிபோல் அந்த அறைக் கதவு சாத்தியிருந்தது.

பட்!

பட்... பட்...!

பத்துப் பதினைந்து பட்டுக் கரங்கள் கதவில் பட்டு ஒலித்தன.

'ஆரது' உள்ளே படுக்கையிலிருந்தபடி ஒரு சிட்டுகுரல கொடுத்தது.

'என்னடி இன்னும் உனக்கு விடியவில்லையா?' என்று கேட்டுக்கொண்டே அப் பெண்கள் மேலும் கதவை இடித்தார்கள்.

'சிறிது நேரம் இரடி' [illegible] இட்டு புறமாய் [illegible] பதில்கொடுத்துவிட்டு வலது புறமாகத் திரும்பிப் படுத்தாள்.

அதற்குள் ஒரு வாயாடிப் பெண் என்னடி இராப் பகலாய் எங்களோடு பேசும் போதெல்லாம் ஏதோ சிவபெருமானில் உயிரையே வைத்திருப்பதாகச் சொன்னுயே. இப்பொழுது என்னவென்ருல் ...... ...? என்று சொல்லி நிறுத்தினுள்.

"எடி உனக்கு விஷயம் தெரியாதடி. அவளுக்கு ஒரு இரகசியத் தோழி இருக்கிருளாம். அவளிடம் தான் அவளுக்குப் பாசம் நேசம் எல்லாம். சும்மா எங்களுக்காகச்சிவபெருமா

புலவர்
"தமிழுமாறன்"

னில் என்று சொல்லி வேஷம் போடுகிருள்' என்ருள் குறும்பே உருவான ஒருத்தி.

'அதாரடி அந்த அந்தரங்கத் தோழி' என்ருள் முந்தியவள.

'அதுதானடி இரவுநேரங்களில் குளிர் பிடியாமல் அவளை உறங்க வைக்கும் படுக்கைத தோழி'.

அவ்வளவுதான் 'கொல்' என்ற சிரிப்பொலி எழுந்தது.

இந்த ஒலி உள்ளே நுழைந்து படுக்கையில எழும்ப மனமில்லாமல் கிடந்தவளை எழுப்பிக்கொண்டு வந்து கதவைத் திறக்கும்படி செய்தது.

"ஓச்சி! இப்படிப்பட்ட சொற்களைச்சொல்லலாமா? ஏசி விளையாடுவதற்கு இதுதான் இடமோ என்ருள் ஆத்திரத்துடன்.

'அது சரியம்மா நீங்கள் ஆர்? நாங்கள் ஆர்.......? தேசன் சிவலோகன் தில்லைச் சிற்றம்பலவனைப் பேசுவதற்கு உங்களுக்குத்தான் தகுதியிருக்கு. எங்களுக்குக் கொஞ்சங்கூட இல்லை. எங்களை மன்னியுங்கம்மா!' என்ருள் ஒருத்தி பயந்தவள்போல் பாசாங்கு செய்து கொண்டு.

அவளே தொடர்ந்து "அம்மா வருகிறீர்களா...! உங்கள் திருவாயால் எங்கள் சிவபெருமானைப்பற்றிக் கேட்க ஆசையாயிருக்கம்மா!" என்று சொல்லிக் கேலி செய்தாள்.

இதற்கு மேலும் கோபத்தோடிருக்க அவளால் முடியவில்லை. சிரித்துக் கொண்டு அவர்களுடன் நீராடச் சென்ருள.

இக்காட்சி எங்கே வருகிறது? 'சினிமா'த் திரையிலா? இல்லை நாடக மேடையிலா என்று கேட்கிறீர்களா?

எங்கும் வரவில்லை.

உங்களுக்கு அறிமுகமான ஓர் பாடலில் வருகிறது. இன்று தொடக்கம பத்து நாட்களுக்கு உங்கள் காதுகளில் ஒலிக்கப்போகும் ஓர் பாடலில் வருகிறது. உள்ளும்தோறும உவகை பயக்கும் 20 பாடல்களைக் கொண்ட திருவெம்பாவையில் ஓர் பாடலாக வருகிறது.

"பாசம் பரஞ்சோதிக்(கு)
என்பாய் இராப்பகல்நாம்
போசும்போ தெப்போதிப்
போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ?
நேரிழையாய்! நேரிழையீர் !
'சீசீ' இவையும்
சிலவோ? விளையாடி
ஏசுமிடம் ஈதோ?
விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசு மலர்ப்பாதம்
தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன்
தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனர்க் கன்பார்யாம்
ஆரேலோ ரெம்பாவாய்."

இத்தகைய நகைச்சுவை உரையாடலையும் இன்னும் பல தத்துவங்களையும் உள்ளடக்கியிருக்கும இத்திருவெம்பாவைப்பாடலை இந்த வாரம் சுவைத்துப்பாருங்கள். —தொடரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மங்கையர் நோற்கும் ...............

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

னும் தன் பொற் கரணங்களால் நிலமடந்தையைத் தழுவ முற்பட்டான். இக் காட்சிகளைக் கண்டு இன்புறுதற்கு மகளிர் அதிகாலையே எழுந்து தங்கள் தோழியருடன் சென்று புனலாடி நோன்பிருந்து இறைவனை வணங்குவார்கள்.

அதிகாலையே எழுந்த மகளிர் தங்கள் தோழியரின் இல்லங்கள் தோறும் சென்று அவர்களைத் துயில்நீக்குகின்றார்கள். வாள் தடங்கண் மாதே! ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெருஞ்சோதியை யாம் பாடக் கேட்டேயும் நீ வளருதியோ?" "பிள்ளாய்! புள்ளுஞ் சிலம்பினகாண் புள்ளரையன் கோவிலிலே, வெள்ளை விளிசங்கின் பேரரவம் கேட்டிலையோ? எழுந்திராய்." "வாச நறுங்குழல் ஆய்ச்சியர் மத்தினால் ஓசைபடுத்தத் தயிரரவம் கேட்டிலையோ? நாயகப் பெண்பிள்ளாய்! முத்தன்ன வெண்ணகையாய்! நீ முன் எதிர் எழுந்து, அத்தன், ஆனந்தன் அமுதன் என்று தித்திக்கப் பேசுவாய், இன்று நாம் அழைத்தும் நீவந்து உன் கடைதிறவாமல் இருக்கின்றாயே! 'ஒண்ணித்திலநகையாய்! இன்னம் புலர்ந்தின்றோ? வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரே, நாம் கேழில் பரயசோதி கேழில் பரங்கருணை கேழில் விழுப்பொருள்கள் பாடினோம்கேட்டிலையோ? வாழி யீதென்ன உறக்கமோ! வந்து உன்கடை திறவாய்" என்று பலவாறு பண்புடன் தமது அருமைத் தோழியரைத் துயிலெழுப்பவும் அவர்கள் எழாமைகண்டு அவர்களைச் சினந்து,

"தூமணி மாடத்துச் சுற்றும்
விளக்கெரிய
தூபம் கமழத் துயிலணை
மேற்கண் வளரும்
மாமான் மகளே! மணிக்கதவம்
தாள்திறவாய்
மாமீர் அவளை எழுப்பீரோ?
உம்மகள்தான்
ஊமையோ? அன்றிச் செவிடோ!
அனந்தலோ!
ஏமப் பெருந்துயில் மந்திரப்
பட்டாளோ?'

என்றெல்லாம் பலவாறு பேசி எழுப்பவும், அவர்கள் அசையாமல் துயில்வதைக் கண்டு அவர்களைக்கேலிசெய்வார்கள்

" ... ... ... ... ... ... ... ...
பண்டொருநாள்
கூற்றின் வாய்வீழ்ந்த
கும்பகருணனும்
தோற்றும் உனக்கே
பெருந்துயில்தான் தந்தானோ?
ஆற்ற அனந்தலுடையாய்?
அருங்கலமே!
தேற்றமாய் வந்து திற ... ... ..."

இனித் துயில் எழுந்த மகளிர் புனலாடலைக்காண்போம் புனலாடல் பண்டைய மகளிரின் இன் விளையாட்டுக்களில் ஒன்று. இவ்விரும்பத்தக்க விளையாட்டுக்களின் குறிப்புக்களை நாம் பண்டைய தமிழ் இலக்கியங்களில் பரக்கக் காணலாம். புனலாடல் அருவியாடல் சுனையாடல் என இருவகைப்படும். வாதவூரடிகள் கண்ட மகளிர் "மொய்யார் தடம் பொய்கை புகுந்து, முருகரென்னக் கையாற் குடைந்தும்," ஒருவர் மேலொருவர் நீரை எற்றியும், குங்கும், சந்தனம் முதலிய வாசனைக் குழம்புகளை வீசியும், ஒருவரை ஒருவர் நீந்திப் பிடித்தும் விளையாடுவர் "மலரிட்டு முடிந்த கூந்தலகளிலே வண்டுகள் சுழன்று இன்னிசை பாடவும்," "காதார் குழையாடப், பைம்பூண் கலனாடக், கோதை குழலாட, வண்டின் குழாமாட," எல்லாம் வல்ல இறைவன் புகழ்பாடி" எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த பூத்திகழும் பொய்கையில், புகப்பாய்ந்து, தங்கள் சங்கஞ் சிலம்பச், சிலம்பு கலந்தார்ப்பக், கொங்கைகள் பொங்கக், குடையும் புனல் பொங்கப் பங்கயப் பூம்புனல் பாய்ந்து ஆடினார்கள்

புனலாடிய மகளிர் தூய ஆடை உடுத்துப் பரிசுத்த உள்ளத்தினராய் இறைவன் உறையும் உறைவிடங்கட்குச் சென்று வணங்குகின்றார்கள். திருப்பள்ளி எழுச்சி பாடி இறைவன் துயில் நீக்கி, விசேட பூசை செய்து திருவெம்பாவை பாடுவார்கள்.

இப்புண்ணிய காலத்தில் மகளிர் பலர் நோன்பு நோற்பார்கள். திருப்பாவையில் நோன்பின் வகைகள் கூறப்பட்டிருக்கின்றன. மகளிர் தங்களின் நல்வாழ்வுக்காகவும், பிற உயிர்களின் இன்ப வாழ்வுக்காகவும், வானம் சுரந்து மாதம் மும்மாரி பெய்து வையகம் வளம்பெறவும், நாட்டிற் செல்வம் பெருகவும், நாடு தீங்கின்றித் தழைத்தோங்கி நல்வழிச் செல்லவும், பசுக்களும் தீம்பால் சுரந்து மக்கட்குச் சிறந்த பயனைக் கொடுக்கவும், உள்ளன்புடன் நோன்புநோற்பார்கள் ஆண்டாள் கண்ட மகளிர் கண்ணனைத் தமது அருங்கணவனாகப் பெறும் பொருட்டு நோன்பிருந்தார்கள். இவ்வாறு மகளிர் நோன்பினால் நாட்டிற்கும், வீட்டிற்கும் நல்லன செய்தும், கற்புடைப் பெண்டிரையும் பெருமையில் வென்றுவிட்டனர். "மாத மும்மாரியில்" கற்புடைப்பெண்டிருக்கு ஒரு மாரி என்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது. —தொடரும்.

## கைதடி வயோதிபர் சாலை

4-12-64 ல் அன்று சைவ பரிபாலன சபையாரவில் கைதடி வயோதிபர்சாலையிலுள்ள மக்களுக்கு, சைவ வித்தியாபூஷணம் திரு. சி. உ. சோமசேகரம் அவர்களும், திரு. மு. மயில்வாகனம் 'சமய வாழ்க்கை', 'கடவுள் வழிபாடு' என்னும் பொருள்கள் பற்றி விரிவுரை நிகழ்த்தினார்கள். சமூகமளித்தவர்கள் பக்திசிரத்தையுடன் விரிவுரைகளைக்கேட்டுப் பயனடைந்தனர். அவர்களுள் மூவர் சபையின் தொண்டைப் பாராட்டி நன்றிகூறினார்கள்.

## விநாயக புராணப் படிப்பு

வேலணை மேற்கு, பெரியபுலம் மகாகணபதிப்பிள்ளையார் கோயிலில் நிகழும் கார்த்திகை மாசம் 6-ம்திகதி சனிக்கிழமை (21-11 64 சுபதின முகூர்த்தத்தில் ஆரம்பித்து விநாயக புராண படனம் தினந்தோறும் நடைபெறுகிறது.

குறித்த ஆலயத்தில் பண்டைக் காலத்தில ஸ்ரீமான். வி கந்தப்பு உபாத்தியாயர், ஸ்ரீமான். நமசிவாயம்பிள்ளை, ஸ்ரீமான். ம, தம்பு உபாத்தியாயர். ஸ்ரீமான், செ கனகசபாபதிப்பிள்ளை முதலியவர்களால் புராணபடனம் சிறப்பாக நடைபெற்றுவந்தது பூர்த்திபடிப்பிலன்று விநாயகப் பெருமானுக்கு விசேஷ அபிஷேகமும் அன்னதானமும் நடைபெறும்.

## சேவையாளராம்...!



"என்னம்மான்! திவ்விய சீவன சங்கத்தார் கந்தபுராணத்தைத் திருத்திக் கச்சியப்பருக்குச் சேவை செய்கிறார்களாம்"?

"அப்படியா சங்கதி? கச்சியப்பரும் நாவலர்பெருமானும் இன்று இருந்திருந்தால் இவர்களிடம் நல்ல குட்டு வாங்கி அவமானப்பட்டிருப்பார்கள் நல்லகாலம்! புண்ணியவான்கள் போய் விட்டார்கள்"!

## தேகவியோகம்

திரு. வி. வீரசிங்கம் அவர்கள் சர்வகலாசாலையில் பி ஏ, பரீட்சையில் சித்தியடைந்த பின்பு மானிப்பாய் இந்துக் கல்லூரியில் பிரதமாசிரியராக் கடமையாற்றி மேற்படி கல்லூரியினது வளர்ச்சிக்குப் பெரும் முயற்சியெடுத்தனர்

வடமாகாணக் கூட்டுறவுச் சங்கத்துக்கு நெடுங்காலமாகத் தலைவராகக் கடமையாற்றினவர். கூட்டுறவு இயக்கம் வடமாகாணத்தில் சிறப்படைவதற்குத் தொண்டுபுரிந்தவர்களுள் முக்கியமானவர் இவரே.

அகில இலங்கைச் சைவ இளைஞர் மத்திய மகாசபையின் தலைவராகக் கடமையாற்றி யாழ்ப்பாணத்தில் சைவமகாநாடுகள், சைவ சமய வகுப்புகள் நடாத்தவும உதவி புரிந்தனர். ஸேர். ஜோன் கொத்தலாவலை காலத்தில யாழ்ப்பாணத்தில் சைவப் பணி புரிந்து வந்த வேதாரணியம் குருக்கள்மாருடைய சேவை நம் நாட்டுக்குப் பரம்பரையாகவுள்ளதெனவும் அதனை அவர்கள் தொடர்ந்துபுரிய அநுமதியளிக்க வேண்டுமெனவும் இப்பெரியார் பாராளுமன்றத்தில் எடுத்துக்கூறினர். அதன் விளைவாக அக்காலத்திலிருந்த அத்தனை குருக்கள்மார்களுக்கும் விஸாவைக்காலத்துக்குக் காலம் புதுப்பித்துக் கொடுக்கலாமெனவும். அவர்களுக்குப்பின் அவர்களுடைய இடங்களுக்கு வேறு வேதாரணியக் குருக்கள்மாரை அவர்கள் நியமனஞ் செய்யலாமெனவும் அரசாங்கம் முடிவு செய்தது. திரு வி. வீரசிங்கம் யோகர் சுவாமிகளுடைய உத்தம சீடன். எங்கள் இந்துசாதனம் தமிழ் ஆங்கிலப் பிரசுரங்களுக்கு இடையிடையே விஷயதானமும் செய்து வந்தனர். அவர்களுடைய பிரிவினால் தமிழ்ச் சமூகம் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கின்றது.

எஃப். ஜீவாஜி சகோதரர்கள்
மொத்த, சில்லறை வியாபாரிகள்

அச்சுக்கந்தோர்களுக்கும், பாடசாலைகளுக்கும் தேவையான கடிதம், அச்சடிக்கும் மைகள், பாடசாலை உபகரணங்கள், பாண்சாலைகளுக்கான 'கேக்' பெட்டிகள், கடுதாசிப்பைகள், வியாபாரிகளுக்கான என்வலப்புகள், நூல், மை, கொப்பி, பென்சில், பாடசாலைப் புத்தகங்கள், பேனை, பலவிதமட்டைகள், சோடனைக்கடுதாசிகள் என்பன எம்மிடம் மொத்தமாகவும், சில்லறையாகவும் மலிந்த விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

எஃப். ஜீவாஜி சகோதரர்கள்.
ஜூபிலி பஜார், இலக்கம் 9, மின்சார நிலைய வீதி, (ராணி சினிமாவுக்கருகில்) யாழ்ப்பாணம்.

தலைமைக்காரியாலயம்:
ஜீவாஜி சகோதரர்கள், 50. புதிய சோனகதெரு கொழும்பு-12

கிளை:
இண்டிப்பெண்டன் ரேடிங்கொம்பனி, 51A, 1-ம் குறுக்குத்தெரு கொழும்பு - 11

தொழிற்சாலை: 146, புதிய சோனகத்தெரு, கொழும்பு 12
தொலைபேசி: 7126.

இவ்வாரம் 13-12-64 — 19-12-64

## உங்கள் பலன்?

[ ஸ்ரீ இராதாகிருஷ்ணன் கணிப்பது ]

மேடராசி அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.

நன்மை பயக்கும், மாற்றங்கள் நிகழும், பணம் வரும். புகழும் உண்டு, நிலங்களால் நன்மை, உடல் நலம் குன்றும்.

இடபராசி கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்,

செலவு அதிகம் நிம்மதி குறையும், புதுத்தொழில்கள் தடைப்படும். உடல் நல குன்றும், தந்தைவழி உறவினரால் துன்பம்

மிதுனராசி மிருகசீரிடம், 2 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1ம், 2ம் பாதம்.

உட்பகைவர்களால் தொந்தரவு, எனினும் அவர்களுக்கு வெற்றி இல்லை பழைய முதலீடுகளால் பயன், குடும்பத்தில் தொந்தரவு.

கடகராசி புனர்பூசம் 4ம் பாதம், பூசம் ஆயிலியம்.

நண்பர்களுடன் கருத்து வேறுபாடு, குடும்பத்தொல்லை, நிம்மதிகுறைவு எதிர்ப்பவர்களுக்குத் தோல்வி, தொழில் துறையில் மாற்றம்:

சிங்கராசி மகம், பூரம். உத்தரம் 1-ம் பாதம்.

ஞாயிறு, திங்கள் எச்சரிக்கை. அலுவலகத்தில் தொந்தரவு. எஞ்சிய காலம் தொழில்களுக்கு உகந்தது, சுகக்குறைவு. குடும்பத்தில் தொல்லை.

கன்னிராசி உத்தரம் 2,3,4 பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்

திங்கள் பிற்பகல், செவ்வாய். புதன் எச்சரிக்கை, எஞ்சியகாலம் உகந்தது, அதிக வேலை, வெற்றி உண்டு. பகை நீங்கும்,

துலாம், சித்திரை 3, 4ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்

கிழமையில் முற்பகுதி புதுக் கருமங்களுக்கு உகந்தது, பண வரவு, பொது வாழ்வில் வெற்றி, குடும்பத்தில் தொல்லையும், கருத்து வேறுபாடும், வியாழன் வெள்ளி எச்சரிக்கை.

விருட்சிகராசி விசாகம் 4ம் பாதம் அநுஷம், கேட்டை.

உணர்ச்சிக்குழப்பம், பகைவரால் துன்பம், தாயின் சுகம் குறையும், புதுச் செயல்கள் தடைப்படும், நினைத்தவை நிறைவேறு, கடைசி நாள் கவனம்.

தனுராசி மூலம், பூராடம் உத்தராடம் 1ம் பாதம்.

சுகக்குறைவு, குடும்பத்தில் தொல்லை, பொருள் வரவு பகைவர்க்குத் தோல்வி, தந்தை சுகம் குறையும், வார இறுதியில் பிறரால் உதவி.

மகராசி உத்தராடம் 2,3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம், பாதம்

தனிப்பட்ட குழப்பங்கள் தீரும், வேலை அதிகம், வயிற்றுக்குழப்பம்,

கும்பராசி அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி

பழைய முதலீடுகள் பயன். நிம்மதிக்குறைவு, தேவையற்ற எதிர்ப்புகள், குடும்பத்தொல்லை:

மீனராசி பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி.
1, 2, 3ம் பாதம்

பண வரவு, பகைவர்க்குத் தோல்வி, புகழ் வரவு, நிம்மதி இல்லை, நட்டமும், திருடர் பயமும்.

## சற்பாத்திரர்க்கே அன்னமிடுக

"அன்னதானம் முதலிய தானங்களைச் சற்பாத்திரத்திலே செய்வது புண்ணியம்; அசற்பாத்திரத்திலே செய்வது பாவம் சற்பாத்திரங்களுள்ளும் கருமயாகஞ் செய்வோருக்குக் கொடுத்தது ஒரு பிறப்பளவு நிற்கும் தபோயாகஞ் செய்வோருக்குக் கொடுத்தது நூறு பிறப்பளவு நிற்கும். செபயாகஞ் செய்வோருக்குக் கொடுத்தது ஆயிரம் பிறப்பளவு நிற்கும்; தியானயாகம் செய்வோருக்குக் கொடுத்தது மகாசங்கற்பகாலமளவு நிற்கும்.

—நாவலர்

## பொதுக்கூட்டம்

சாந்தையர் மடம் கூட்டுப் பிரார்த்தனைச் சபையின் பொதுக்கூட்டம் 5-12-64 அன்று திரு மு க. இரத்தினவேலுப்பிள்ளை அவர்கள் தலைமையில் நடைபெற்றது

பத்தாவது ஆண்டு நிறைவு விழாவைச்சிறப்பாகக்கொண்டாடுதல், சமய வகுப்புகள் திருவாதிரை நாளைச் சிறப்புறக் கொண்டாடுதல் ஆகிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மலைமகளே! சூரியன் ஆயிரக்கணக்கான கிரணங்களைக் கொண்டு திக்குகள் எங்கும் பிரகாசமடையும்படி செய்கிறார். ஆனால் என் மனதுள்ளே இருக்கும் இருட்டைப் போக்க சூரியனால் முடியாது. உமது கோமளகரமான பாதங்களால் ஆன்மாக்களுக்கு புறம்பும் உள்ளும் இருளை அகற்றி ஆட்கொள்ளுகிறீர்.

-நாராயணபட்டாத்திரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அடைவு நகை ஏல விற்பனவு

—————0—————

ஊர்காவற்றுறை கரம்பனில் அரசாங்க உத்தரவுடன் அடைவு பிடிக்கும் சிவகலை கனகரெத்தினம் அண்ட் வீ. தம்பிப்பிள்ளை அவர்களிடம் 7 – 1 – 61 தொடக்கம் 29 – 12 – 62 வரை அடைவு வைத்து மீட்கப்படாத அடைவுகள் யாவும் 1965–ம் ஞு தைமீ 9–ம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் மேற்படி கடையில் வைத்து பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

காரைநகர்: 1964–ம் ஞு மார்கழிமீ 8–ம் திகதி.

வை. ஏரம்பமூர்த்தி,
கொம்மிஷனர் அன்ட் ஏல விற்பனையாளர்.
M 234 11, 18—12—64,

---


யாழ்ப்பாணம்

## — ஐக்கிய இலாப நிதி —

1918-ம் ஆ ஸ்தாபிதமானது

100 ரூபா விகிதமான 5000 பங்குகள்
பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்,

சேமிப்புப் பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானுல் ஒருவிகித வட்டியுடன் சேமிப்புப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும்வட்டியும் முறையே 6 விகிதமும் 8 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை
என் மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
சிறுப்பர்.

Std. 14.


---

### கோட்டு விற்பனவு விளம்பரம்

—0—

யாழ்ப்பாணம்
மாவட்டக் கோட்டில்

எஸ். அருணாசலம் சிவகுரு கைம்பெண் செல்லம்மா, (யாழ்ப்பாணம் மாவட்டக் கோட்டில் 1241-ம் உரிமைத் தத்துவ வழக்கில், காரைநகர் மேற்கு காலஞ்சென்ற அருணாசலம் சிவகுருவின் ஆதனங்களின் பராபரிப்புக்காறி) காரைநகர் மேற்கு. —வழக்காளி
இல. M.B. 5808

எதிராக

கன்னித்தம்பி தம்பிப்பிள்ளை, காரைநகர் மேற்கு. —எதிராளி

யாழ்ப்பாணம் மாவட்டக் கோட்டில் M B 5808–ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஆதனம் 1965ஆ தைமீ 30–ந்திகதி சனிச்கிழமை முற்பகல் 9 மணி 30 நிமிடம் தொடக்கம் அவ்வாதனத்திற்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னுல் விற்கப்படும்,

தீர்வைத் தொகை:–

முதலும் வட்டியுமாக ரூபா 1,118 - 66 சதம். இன்னும் 1963-ம்ஆ ஆனிமீ 26-ந் தொடக்கம் 1963–ம்ஆ மார்கழிமீ 19-ந்உ வரைக்கும் 1,000 ரூபாவிற்கு நூற்றுக்கு 6 வீத வட்டியும் கூட்டிக் கூட்டிய தொகைக்கு முழுத்தொகை இறுக்கும் வரைக்கும் 1963-ம்ஆ மார்கழிமீ 19–ந் தொடக்கம் நூற்றுக்கு ஐந்துவீத வட்டியும் செலவு ரூபா 251–92½ சதமும், (ஏற்பட்ட செலவு ரூபா 172-17½ சதம், வெலியாத்துச் செலவு ரூபா 54-75 சதம், இனிமேல் ஏற்படுஞ் செலவு ரூபா 25.)

ஆதனடாப்பு:

வடமாகாணம். யாழ்ப்பாண மாவட்டம், தீவுப்பகுதி, காரைதீவுப்பற்று, காரைதீவு மேற்இறை "கரவேப்பந்திடல்" பரப்பு விலலாச்சப் 4. (நாலு) பனைகளும் வடலிகளும், இணறும். எல்லை கிழக்கு ஒழுங்கை, வடக்கு அம்பலவாணர் பெண் பூபதியினுதனம், மேற்கு ரோட்டு தெற்கு குமாரதன் பெண் காமாட்சியினுதனம் இது முழுவதும். தெற்கெல்லைக்காணிக்குரிய தண்ணீர்ப் பங்கும், வழி வாய்க்கால் பாவிப் புரித்தும் பிறநீங்கலாக. பதிவ இலக்கம் C 268/89, பின் பதிவிலக்கம் C 352/207,

நா. க. பொன்னுத்துரை
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
"அகிலகம்" 28/1, யாழ் வீதி,
யாழ்ப்பாணம், 11-12-64
M 236 11-12-64,

---

### கோட்டு விற்பனவு விளம்பரம்

———

வயாவிளான், பலாலி தெற்கு பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் மட்டுப்படுத்தப்பட்டது.
—வழக்காளி

எதிராக

வயாவிளான்
1, கந்தப்பிள்ளை சின்னர்
—எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M,B. 5711–ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் 2 துண்டுக் காணிகளை 1965-ம்ஞு தைமீ 9உ சனிக்கிழமை முற்பகல் 9½, 10 மணி தொடக்கம் அந்தந்தக்காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:-முதல்வட்டி ரூபாய் 672/34–ம். 28-5-63 திகதி தொடக்கம் 11 - 3 - 64 திகதி வரைக்கும் ரூபாய் 646/48–க்கு 4 வீத வட்டியும் அதன் பின் முழுத்தொகைக்கும் இறக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 165/05.

ஆதன விபரம்:

1, யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்கு மயிலிட்டிக் கோவிற்பற்று பலாலி இறை, "அப்புதும்பை" நிலப்பரப்பு 20 கிணறும் தென்னை மரங்களும். எல்லை கிழக்கு அம்பலவாணர் காசிப்பிள்ளைக்கும் மறுபேருக்குமுரிய ஆதனங்கள், வடக்கு சிதம்பரநாதர் இளையதம்பிக்குரிய ஆதனம், மேற்கு ஐயம்பெருமாள் சின்னப்பிள்ளைக்குரிய ஆதனமும் ஒழுங்கையும், தெற்கு ஒழுங்கை இதடங்கலும் விற்கப்படும்,

2. மயிலிட்டி கோவிற்பற்று பலாலி இறை "அப்புதும்பை" நிலப்பரப்பு 12. எல்லை கிழக்கு மூத்ததம்பி வேலுப்பிள்ளைக்கும் மறுபேருக்குமுரிய ஆதனங்கள், வடக்கும் மூத்ததம்பி வேலுப்பிள்ளைக்கும் மறுபேருக்குமுரிய ஆதனங்கள், மேற்கு கார்த்திகேசு இளையதம்பிக்கும் மறுபேருக்கு முரிய ஆதனங்கள், தெற்கு எதிராளிக்குரிய ஆதனம், இதடங்கலும், 9 - 1 - 65 திகதி காலை 10 மணிக்கு விற்கப்படும்,

ந. ஆறுமுகம்,
கொமிசனரும் விலைமதிப்பாளரும்,
சித்தங்கேணி, 7-12-1964.
M 235 11-12-64

---

மனத்தொடுவாய்மைமொழியிற்
றவத்தொடு
தானஞ் செய்வாரிற்றலை"

---

### கோட்டு விற்பனவு விளம்பரம்

—:—

அல்லாரை.
கனகர் செல்லையா
—வழக்காளி
இல. 2177

எதிராக

சாவகச்சேரி வடக்கு
மூத்தர் செல்லையா —எதிராளி.

சாவகச்சேரி டிஸ்திறிக்கோட்டில் 2177-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி. பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1964 – ம் ஆண்டு டிசெம்பர் (மார்கழி) மாதம் 31 – ம் திகதி (31-12-64) வியாழக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:-முதல்வட்டி ரூபாய் 1582-97-ம். இதில் ரூபாய் 1000-க்கு 24-3-61 திகதி தொடக்கம் 6–2–64 திகதி வரைக்கும் 100-க்கு 12 வீத வட்டியும் பின் திகதிதொடக்கம் முழுத்தொகைக்கும் இறுபடும்வரைக்கும் 100–க்கு 5 வீத வட்டியும். கோட்டுச் செலவு ரூபாய் 250/– இதில் கோட்டுச்செலவும், மேலும் ரூபா 750/– இறுபட்டது மிகுதி ரூபா 1266–37 சதம்,

காணியின் விபரம்:

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கராச்சிப்பகுதி கராச்சிக் கோவிற்பற்று பெரிய பரந்தன் இறை, "கள்ளமூட்டை வயல்" நெற்பரப்பு (80) எல்லை கிழக்கு கந்தையா பெண் அம்மாக்குட்டிக்கும் சகோதரனுக்குமுரிய ஆதனம். வடக்கு முடிக்குரிய காணி. மேற்கு பேரம்பலம் பெண் தங்கம்மாவின் ஆதனம், தெற்கு வரய்க்காலும் வல்லிபுரம் கந்தையாவுக்கும் சகோதரனுக்குமுரிய ஆதனம். இதில் சொரியலாய் அரைவாசியும் இன்னும் தெற்கெல்லையில் இருக்கும் விடுதிப்பிட்டியில் மேற்குப்பக்கமாக நாவில் ஒரு பங்கும், மேலும் விடுதிப்பிட்டியில் இருக்கும் புளி, வேம்புகளில் நாலில் ஒரு பங்கும். முற்பஉவு B 32/290.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
Commissioner, Valuer & Licensed Auctioneer.
தெல்லிப்பழை, 31–10–1964,
M 233 11-12-64

---

### கோட்டு விற்பனவு விளம்பரம்

———

இல. M B 5241
(1) இளையதம்பி சிற்றம்பலம்
(2) பெண் வள்ளிஅம்மா
இருவரும் சுருவில்
-வழக்காளிகள்.

எதிராக

(1) கந்தையா செல்லத்துரை
(2) பெண் கற்பகம் இருவரும்
கரம்பன் —எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B 5241 -ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1965 ம் ஞு மாசி மீ 2 உ சனிக்கிழமை பிற்பகல் 2 மணி தொடக்கம் அந்தக காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:-முதல்வட்டி ரூபா 2686-18 சதம். 26-1-1962 தொடக்கம் 28-2-63 வரைக்கும் ரூபா 2000 க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 235-00.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் ஊர்காவற்றுறை கோயிற்பற்று கரம்பன் இறை "உலாயடியிற் சாட்டி" எனும் காணி நெற்பரப்பு 7ம் (ஏழு, கிணற்றுப் பங்கும், வீடும் தலைவாசலும், குசினியும் செய்பயிர் வான் பயிரும் உண்டு. எல்லை கிழக்கு சுப்பையா அருணாசலமும், இணறும், வடக்கு சுப்பையா இரத்தினமும், மேற்கு சுப்பையா இரத்தினத்தின் ஆதனமும். ரோட்டும் தெற்கு ரோட்டும் உண்டு.

இ. கனகரெத்தினம்,
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்,
கண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
M 232 11-12-64,

---

## Commission Sale
## விற்பனவு விளம்பரம்

————————

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்ற வழக்கு இல. 6534.

வழக்காளி: 1, கந்தையா இராசரட்ணம், அல்வாய் வடக்கு.
எதிராக: பொன்னு கந்தையா, மானிப்பாய், தற்காலம் வண்ணார்பண்ணை மேற்கு, யாழ்ப்பாணம்.

மேற்குறித்த இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எனக்கு அனுப்பப்பட்ட கொம்மிஷன் அதிகாரப்படியும் இதன்கீழ்க்காணும் ஆதனங்கள் 1965-ம் ஆ தை மீ 13 உ (13-1-65) புதன்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் குறித்த ஆதனங்களிடமாக இருந்து என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்

ஆதன இடாப்பு:

1, வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப் பகுதி அச்சுவேலிக்கோயிற்பற்று தம்பாலை குறிச்சி 'ஈச்சன்தரவை வயல்" நெல் பரப்பு 24½, இதில் சொரியலாய் நெற்பரப்பு 3. எல்லை கிழக்கு குமரேசு வல்லிபுரத்திற்கும் பங்காளிகளுக்குமுடைய ஆதனம். வடக்கு கனகசபை விஸ்வலிங்கத்திற்கும் பங்காளிகளுக்குமுடைய ஆதனம். மேற்கு வயிரமுத்து கதிர்காமருடைய உரிமைக்காறருக்கு உடைய ஆதனம். தெற்கு கதிர்காமர் கந்தையாவுக்கும் பங்காளிகளுக்கும் உடைய ஆதனம். இது K 69/224–ல் பதியப்பட்டது. கிணற்றுப்பங்குடன்.

2, ஷை கோயில்பற்று கதிரிப்பாய் குறிச்சி "கொள்ளைவான்திக் கலட்டி" நில. பர. 200, இதில் பிரிக்கப்பட்ட நில. பர. 40. சொல்லப்பட்ட நில. பர, 40 இன் எல்லை கிழக்கும் தெற்கும் ஒழுங்கை, வடக்கு வல்லிபுரம் செல்லையாவுடைய ஆதனம் தம்பனைக் கிராம எல்லையில் மேற்கு கீழே விபரிக்கப்பட்ட ஆதனம். இது K 135/289 இல் பதியப்பட்டது,

3. ஷை கோயில்பற்று கதிரிப்பாய் குறிச்சி "வெறுகன்தனை" நில, பர, 24. ஆனுல் ஆட்சியின்படி நில பர. 28. பெரிய சிறிய பனைகளுடன் சொல்லப்பட்ட நில. பர. 28 உடைய எல்லை கிழக்கு மேலே சொல்லப்பட்ட 2-ம் காணி, வடக்கு கதிர்காமர் வயித்திலிங்கத்திற்கும் பங்காளிகளுடைய ஆனதனம், மேற்கு தம்பையா முருகுப்பிள்ளையுடையதும் பங்காளிகளுடைய ஆதனம். தெற்கு காசிலிங்கம் பெண் தெய்வானைக்கும் பங்காளிகளுடைய ஆதனம். இதில் சொரியலாய் 1/8 பங்கு, பதியப்பட்டது K 135/290 கிணற்றுப் பங்குடன்

4, ஷை கோவிற்பற்று கதிரிப்பாய் குறிச்சி "வெறுகன்தனை" நில. பர. 38, பெரிய சிறிய பனைகளுடன். சொல்லப்பட்ட நில. பர. 38-க்கு எல்லை கிழகக்கு வல்லிபுரம செல்லையாவுக்கும் பங்காளிகளுக்கும் உடைய ஆதனம், வடகக்கு மயில்வாகனம் பெண் தெய்வானைக்கும் பங்காளிகளுக்கும் உடைய ஆதனம், மேற்கு அம்பிகைபாகன் பெண் வல்லியாளுக்கும் பங்காளிகளுககும் உடைய ஆதனம், தெற்கு காசிலிங்கம் பெண் தெய்வானைக்கும் பங்காளிகளுக்கும். இதில் சொரியலாய் 1/16 பங்கு. K 31/194 பதியப்பட்டது கிணற்றுப் பங்குடன்.

5, ஷை கோயில்பற்று கதிரிப்பாய் குறிச்சி "மாம்புலோ" நில. பர. 14, ஆனுல் ஆட்சியின்படி நில. பர. 20. பெரிய, சிறிய பனைகளுடன், இதில் 1/6 பங்கு. சொல்லப்பட்ட நில. பர. 20-க்கு எல்லை கிழக்கு முருகுப்பிள்ளை பெண் சின்னம்மாவுக்கும் பங்காளிகளுக்கும், வடக்கு ஒழுங்கை: மேற்கு ஆறுமுகம் சின்னப்புவுக்கும் பங்காளிக்கும் உடைய ஆதனம், தெற்கு தம்பர் முருகுப்பிள்ளைக்கும் பங்காளிகளுககும் உடைய ஆதனம் பதியப்பட்டது K 30/105 கிணற்றுப்பங்குடன்,

6. ஷை கோயில்பற்று தம்பாலை குறிச்சி 'தம்பக்கடவை வயல்' நெல, பர. 80. இதில் சொரியலாய் 1/16 பங்கு. சொல்லப்பட்ட நெல். பர. 80–க்கு எல்லை கிழக்கு வேலணிற்பிள்ளையார் கோவில், வடக்கு சமசிவாயத்தின் பெண் லட்சுமி உடைய ஆதனம், மேற்கு சுப்பிரமணியம வடிவேலுவுக்கும் பங்காளிகளுக்கும் உடைய ஆதனம், தெற்கு அம்பிகைபாகர் கந்தையாவுககும பங்காளிகளுககும் உடைய ஆதனம. இது K 30/106 பதியப்பட்டது,

7- ஷை கோயில்பற்று தம்பாலை குறிச்சி "தம்பககடவை" நில. பர. 20, பெரிய, சிறிய பனைகளுடன். இதில் சொரியலாய் 5/24 பங்கு. சொல்லிய நில. பர, 20–கக்கு எல்லை கிழக்கு வைரவநாதர் கதிரவேலுவுககும் பங்காளிகளுககும் உடைய ஆதனம், வடக்கு மேலே சொல்லிய 6–ம் காணி, மேற்கும், தெற்கும் சுப்பிரமணியம வடிவேலுவுக்கும் பங்காளிகளுககும் உடைய ஆதனம். இது K 30/108 பதியப்பட்டது. கிணற்றுப்பங்குடன்,

8. ஷை கோயில்பற்று வலலாய் "திம்பலனுடை" நில. பர. 24 கிணற்றுடன். எல்லை கிழக்கும், மேற்கும், தெற்கும் ஒழுங்கை, வடக்கு எல்லை செல்லையா கைம்பெண் வீரமுத்துவின் ஆதனம், இதில் சொரியலாய் ½ பங்கு K 135/292 பதியப்பட்டது. கிணற்றுப்பங்கும்.

9. ஷை கோயில்பற்று வலலாய் "ஆவறம்புலோ" நெல்,பர. 28. சொல்லப்பட்ட நெல். பர. 28 இன் எல்லை கிழகக்கு சுப்பர் கந்தையாவுக்கும் பங்காளிகளுககும், வடக்கு கணபதிப்பிள்ளை தம்பரின் உரித்தாளிகளுக்கும் பங்காளிகளுககும், மேற்கு தம்பர் குமாரவேலுவுககும் பங்காளிகளுககும், தெற்கு சுப்பர் விஞசிததம்பிக்கும் பங்காளிகளுக்கும் இதில் ½ பங்கு பதியப்பட்டது K 135/293

10. "குலுப்பன் கலட்டி" நில. பர- 72½. எல்லை கிழக்கும், வடக்கும் ஒழுங்கை, மேற்கு அம்பிகைபாகர் வேலுப்பிள்ளைக்கும் பங்காளிகளுககும், தெற்கு புவனேஸ்வரி வித்தியாசாலை. இதில் 1/6 பங்கு. K 135/295 பதியப்பட்டது.

| | | ரூ, ச. |
|---|---|---|
| 1. | தீர்வைத்தொகை:- | 2770-00 |
| 2, | வட்டி 200–க்கு 18-11-54 இருந்து 19-2-60 வரை 12%வீதம் | 60-00 |
| 3. | வட்டி 2830-க்கு 19-2-60 இருந்து 29-9-64 வரை 5%வீதம் | 644-61 |
| | | 3474-61 |
| 4. | செலவு | 305-52 |
| | | 3780-13 |

மேற்கொண்டு ரூபா 2830–க்கு 5%வீதப்படி 29-9-64 இருந்து முழுத்தொகை இறுககும்வரை அல்லது விற்பனவுத் தேதிவரை வட்டி.

கா. முத்துக்குமாருஐயர்,
சந்நிதிவேல், கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
பருத்தித்துறை. 27-11-64. Commissioner of Sales& Valuer.
M. 229 11—12—64.

---

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறைவீதி 450–ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாசயந்திரசாலையில், யாழ்ப்பாணம் பிறவுண்வீதி 2-ம் ஒழுங்கை 2-ம் இலக்கத்தில்வசிக்கும் திரு. ஐயம்பிள்ளை சின்னத்துரை அவர்களால் 11-12-1964 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org